## 2019 ஜூன் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of June 2019

| | | |
|---|---|---|
| 07th June<br>11:00AM–1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 7th June<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 14th June<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 21st June<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 22nd June<br>7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 28th June<br>7:30PM–8:30PM | மாலை ஆராதனை<br>சிறுவர் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th June<br>11:30PM-12:30AM | மாத இறுதி மற்றும் ஜுன் மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |
| | | |

திருச்சபையின் ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.
050 586 8173 / 056 441 1225 / 050 482 1006

### உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
செயலரிடமிருந்து
வேதாகம களஞ்சியம்
கட்டுரைகள்
சிறுவர் பகுதி
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள் திருமண நாள் ஆசரிப்போர்
தெரிந்து கொள்வோம்
தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை அலைவன் ஊழியங்கள் (பொது)

மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்–அய்ன்
Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | *7:00 PM* | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | *6:30 PM* | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *7:00 PM* | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *6:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளி | *6:15 PM* | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1stFriday / வெள்ளி | *11:00AM* | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | *7:00 PM* | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | *7:30 PM* | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | *7:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | *11:30PM* | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்க ஆராதனை |






# ஆயர் மடல்...

இயேசு கிறிஸ்துவின் கிருபைக்கு பாத்திரவான்களே!

இந்த ஜனவரி மாதத்தைக் காண நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட வாய்ப்பை நன்றியுணர்வோடு நம்மில் அநேகர் எண்ணிப் பார்ப்பதில்லை. நாம் எண்ணிப்பார்க்கிறோமோ இல்லையோ, தேவன் நம்மை பாதுகாத்து தன் கண்மணி போல பராமரித்துக் கொண்டுமிருக்கிறார். மோசே 90'ம் சங்கீதத்தில் ஜெபித்தது போல நாட்களை எண்ணும் அறிவை எனக்குத் தாரும், அப்படிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு தான், ஒவ்வொரு புதிய மாதப்பிறப்பையும் தேவ சமூகத்திலே, மாதாந்திர நடுஇரவு ஜெபஐக்கியத்திலே துவங்க நம் அனைவரையும் உற்சாகப்படுத்துகிறது. நமது திருச்சபை நடத்துகின்ற இந்த நடு இரவு ஜெபத்தில் கலந்து கொண்டு, தேவ ஆசீர்வாதத்தோடு ஒவ்வொரு புதிய மாதத்தையும் துவங்க, உங்களனைவரையும் அன்போடு அழைக்கிறேன்.

திருச்சபை நடத்துகின்ற ஒவ்வொரு ஊழியத்திலும் பல்வேறுவிதமான ஆசீர்வாதங்கள் உண்டு, ஆதலால் **Bible study, Men's fellowship, women's fellowship, Fasting prayer, Youth group, camp ministry** போன்ற ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெற அழைக்கிறேன்.

கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய அறிகிற அறிவில் விருத்தியடைய, அவரது தேவராஜ்ஜிய ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெற உங்களை அழைக்கும்...

உங்களுடைய ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**

# திருமறை தியானப்பகுதி

## “மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும்”

எசேக்கியேல் 47:12b.

**They will bear fresh fruit every month!**

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தர் தீர்க்கதரிசனங்கள், உவமைகள், அடையாளங்கள், குறிப்புகள் என பலவற்றைப் பயன்படுத்தி பாபிலோனியச் சிறைவாழ் மக்களுக்கு தமது செய்தியை விளக்கிக் காட்டுகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ளதுபோல தேவ மகிமை பற்றிய காரியங்கள் குறிப்புகள் வழியாக விளக்கப்படுகிறது.

எசேக்கியேல் தம்மை இந்த ஊழியத்திற்கு முற்றிலுமாக தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் கட்டளையிட்டபடி பல நடிப்பு அடையாளங்களைச் செய்ய எப்போதும் தயாராக இருந்தார்.

- ஊமையாக வீட்டுக்குள் அடைந்து கிடத்தல் (3:23–27).
- 390 நாட்கள் இடது பக்கமாகவும் 40 நாட்கள் வலது பக்கமாகச் ஒருக்களித்துப் படுத்தல் (4:4–8).
- சாணியைப் பயன்படுத்தி உணவு சமைத்து உண்ணுதல் (4:9–17).
- ஊமையாக இருத்தல் (24:25–27).

எசேக்கியேலை மூன்று பகுதிகளாகப் பகுத்து ஆராயலாம்:

1. எருசலேம் அழிவுக்கு முந்தியது (அதிகாரம் 1–24).
   இதில் தேவஜனங்களுக்கு எதிரான எச்சரிப்புகள் உள்ளடங்கியுள்ளன.

2. எருசலேம் அழிவின் காலத்தது (25–32).
   இதில் தேவஜனங்களின் எதிரிகளுக்கான நியாயத்தீர்ப்புகள்.

3. எருசலேம் அழிவுக்குப் பிந்தியது (33–48).
   நம்முடைய தியானப்பகுதி 47 ம் அதிகாரம் இஸ்ரவேல் திரும்பச்சேர்க்கல் மற்றும் மகிமை திரும்புதல்.

இந்த மகிமையின் காலத்தில் தான் இஸ்ரவேல் தனது தேசத்தையும், ஆன்மீகத்தையும் திரும்பப் பெற்றுச் செழிக்கும் நிலை.தேசத்தின் விடுதலையும், செழிப்பும்,ஆன்மீக வாழ்க்கையும் இணைந்தே பார்க்கப்படுகிறது. ஆதலால் தான் இயேசுவைப்பற்றிய புரிதலும் இந்த அடிப்படையிலே தவறாக புரிந்து கொள்ளப்பட்டது. ஆன்மீகம் என்றால் எதிரிகளிடமிருந்து உலகப்பிரகாரமான ஒரு விடுதலையாக பார்க்கப்பட்டது. ஆனால் இயேசு ஒரு ஆவிக்குரிய தேவராஜ்ஜியத்தை இந்த உலகில் கட்டமைக்கவே வந்தார். இந்த புரிதலோடு இந்த 47 ம் அதிகாரத்தை பார்ப்போம் என்றால் , ஆலயம் என்பது எருசலேம் தேவாலயத்தை மேலோட்டமாக குறிப்பதாக இருந்தாலும், **It may denotes Heavenly Father's throne and Christ's Crucifixion on the Cross, Altar is a place of sacrifice,** இதை வெளிப்படுத்தின விசேஷம் 22:1,2 பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும்,ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், 12 விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக்கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள். Revelation 21:22 அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். இதிலிருந்து என்ன புரிகிறது?

**God's River is type of Holy Spirit John 14:16-18.Holy Spirit was poured upon Believers immeasurably after the sacrificial death of Christ on the altar of the cross and gave His eternal life as ransom for many (Matthew 20:28) John 16:7.** இயேசுவின் நற்செய்தியும் **Gospel,** இயேசுவின் வார்த்தையும் **Bible,** ஜீவ நதிபோல பாயும் திருச்சபையின் ஊழியத்தின் மூலமாக,நதியோர விருட்சங்களாகிய விசுவாசிகளாகிய நாம்,திருச்சபை மக்களாகிய நாம் எசேக்கியேல் 47 :12 ன்படி நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் புசிப்புக்கான சகலவிதமான விருட்சங்களும் வளரும்; அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை, அவைகளுக்கு பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளை கொடுத்துக் கொண்டேயிருக்கும். அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அவைகளின் இலைகள் அவிழ்துக்குமானவைகள்.

விசுவாசிகளாகிய நாம் ஜீவதண்ணீராகிய பரிசுத்த ஆவியினால் எப்பொழுதும் நிரப்பப்பட்டு, வேதத்திலுள்ள தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டு, 12 விதமான கனிகளை ( நற்செய்தி, நற்செயல்,தேவ மகிமையை வெளிப்படுத்தும்

வாழ்க்கை முறை, நற்குணங்களை பரிசுத்த ஆவியின் கனிகள், தேவனுக்கேற்ற அர்ப்பணிக்க ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்வு, பிற (அன்பு,நியாயம்) போன்ற பிற சந்தோஷமாக புசிக்கக் கூடிய கனிகளை தவறாமல் ஒவ்வொரு மாதமும் நமது தேவனை மகிமைப்படுத்தும் பொழுது சங்கீதம்92 ன்படி முதிர் வயதிலும் நாம் பசுமையாய், செழிப்புமாக இருந்து தப்பாமல் நற்கனிகளை கொடுத்துக்கொண்டேயிருப்போம்.

**Shall we give good fruits in this month...?**

அன்புடன்... உங்கள் ஆயர்,
Rev. M. Christopher Rajendran




**Listen without Interrupting (Proverbs 18)**
**Speak Without Accusing (James 1:19)**
**Give Without Sparing (Proverbs 21:26)**
**Pray without Ceasing (Colossians 1:9)**
**Answer without Arguing (Proverbs 17:1)**
**Share without Pretending (Ephesians 4:15)**
**Enjoy without Complaint (Philippines 2: 14)**
**Trust without wavering (1 Corinthians 13:7)**
**Forgive without Punishing (Colossians 3:13)**
**Promise without forgetting (Proverbs 13:12)**

– Jayantha John

**தேவன் தருகிற பொருளாதார ஆசீர்வாதம்**
**மிடுக்கான வாழ்விற்கு அல்ல...**
**கொடுக்கும் வாழ்விற்கே..!!!**

# செயலரிடமிருந்து...

# Faith in GOD Includes Faith in HIS Timings

பிரியமானவர்களே...

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்கள் யாவருக்கும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

ஆலய ஆராதனைகள் அனைத்தும் கர்த்தருடைய சித்தப்படி நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபையளித்தார். 10/05/2019 அன்று நடைபெற்ற வேதாகம தேர்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் சபையின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கென நீங்கள் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளுக்கும் கர்த்தர் மிகுந்த பலனை உங்கள் வாழ்வில் கட்டளையிடுவாராக. தொடர்ந்து வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். திருச்சபையின் வளர்ச்சியில் உங்கள் முழு ஆதரவை தாருங்கள்.

உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், உதவியும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க அதிகமாய் ஜெபிக்க வேண்டுகிறேன். ஆகவே உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன். ஆதி திருச்சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும், உறுதியாய் தரித்திருந்தது போல, நாமும் சபையின் நோக்கத்தை அறிந்து செயல்படுவோம். கர்த்தர் நம் சபையை உயர்த்தி சாட்சியான சபையாக தொடர்ந்து வழிநடத்துவாராக

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

| நமது மிஷனரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் | மேல்முத்தூர் குருசிலாப்பூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |
| கர்த்தர் உங்களோடு பேசுவாரானால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறோம். | | |

# வேதாகம நுணுக்கு

- "ஜீவ விருட்சம்" என்ற வார்த்தை வேதத்தில் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தில் 3 முறையும் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தலில் 3 முறையும் வருகிறது. ஆதி 2:9; 3:22, 24. வெளி 2:7; 22:2,14

- "அப்பா பிதாவே" என்று புதிய ஏற்பாட்டில் மூன்று முறை வருகிறது — மாற் 14:36, ரோம 8:15; கலா 4:6

- பிதாவாகிய தேவனை "அப்பா" என்று வேதத்திலே மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளது. (மாற் 14:36, ரோம 8:15, கலா 4:6)

- வேதத்திலே ஆபிரகாம் "தேவனுடைய சிநேகிதன்" என்று மூன்றுமுறை சொல்லப்பட்டுள்ளது. (2 நாளா 20:7, ஏசா 41:8, யாக் 2:23).

- லேவியராகமத்தில் "கர்த்தர்" என்கிற வார்த்தை 21 தடவை வருகிறது. லேவி 11:45, 18:5,22; 19:12,16,18,28,30,32,37; 20:18; 21:12, 22:2,8,31,32,33; 26:2,45.

- லேவியராகமத்தில் "தேவனாகிய கர்த்தர்" என 21 தடவை வருகிறது — லேவி 11:44; 18:4,30; 19:3,4,10,25,31,34,36; 20:7,24; 23:22,43; 24:22; 25:17,38,55; 26:1,13,44.

**மல்கியா:** பழைய ஏற்பாடு 5 முக்கிய சத்தியங்களை வலியுறுத்துகிறது.

1. தேவன் இஸ்ரவேலரை தெரிந்துகொள்ளுதல் (1:2)
2. தேவனுக்கு விரோதமாக இஸ்ரவேலர் மீறுதல் செய்தல் (1:6)
3. மேசியாவின் வருகை (3:1)
4. புற ஜாதிய தேசங்கள் மேல் வரும் உபத்திரவங்கள் (4:1)
5. இஸ்ரவேலர் தேவனால் சுத்திகரிக்கப்படுதல் (3:2—4)

இந்த 5 சத்தியங்களும் மல்கியாவில் ஒருங்கே காணப்படுவதால் இதை "சிறிய பழைய ஏற்பாடு" என்று அழைக்கப்படலாம். மக்கள் தேவனிடம் கேள்வி கேட்டு பதில் பெறுவது போலவும், தேவன் கேள்விகளை கேட்டு மக்களிடமிருந்து பதிலை பெறுவது போலவும், 23 கேள்விகள் இப்புத்தகத்தில் மாறிமாறி கேட்கப்பட்டு பதில் கொடுக்கப்படுகிறது.

வேதாகம களஞ்சியம்

# மிஷனரி சுயசரிதை / Missionary Biography

மிக எளிதாக மிஷனரிகள் என்று சொல்லிவிடுகிறோம். அந்த வார்த்தைக்கு பின் உள்ள அர்த்தம் புரிந்துகொள்ள இயலாதது. நிச்சயமாக அவைகளை வெறும் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. தேவமனிதர்கள் சாதனைப் வாழ்க்கையை தொடர்ச்சியாக வெளியிடுகிறோம். இத்தொடர் சிறப்புடன் தொடரவும், அனேகருடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவரவும் ஜெபியுங்கள்.

## லிவிங்ஸ்டன் யார் தெரியுமா...?

**மனிதரை மாமிசமாக உண்பவர்கள் மத்தியில் ஓர் உன்னத ஊழியம்.**




டேவிட் லிவிங்ஸ்டன் ஒரு ஏழைக் குடும்பத்தில்தான் பிறந்தார். தனக்கு ஒன்பது வயது நடக்கும் போது அவர் ஒரு புதிய ஏற்பாடு ஒன்றை பெற்றார். 119ம் சங்கீதத்தை மனப்பாடம் செய்து ஒப்புவித்ததற்காக, இந்த பரிசு அளிக்கப்பட்டது.

தனது பத்தாவது வயதில் "நூல்" நூற்கும் ஆலையில் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தார். காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை! முதல் வாரத்தில் கூலியின் பாதித்தொகையை தாயாரிடம் கொடுத்து விட்டு பாதித் தொகையில் ஒரு லத்தீன் அகராதியை வாங்கினார். இப்படி காலையில் வேலை செய்து, மாலையில் வகுப்புக்கு சென்று விட்டு, இரவு நேரங்களில், நடு இரவு வரையிலும் படித்துக் கொண்டே இருப்பார். 18வது வயதில் அவர் நூல் நூற்கும் கலையைக் கற்றார். அப்போது ஆலையில் கிடைக்கும் ஓய்வு நேரத்திலெல்லாம் புத்தகத்தை எடுத்துப் படித்து கொண்டே இருப்பார். கொஞ்சம் பணம் சேர்ந்தவுடன்,. வேலையை விட்டுவிட்டு, முழுநேரப் படிப்பை படித்து, கிளாஸ்கோ என்ற கல்லூரியில் "டாக்டர்"-களுக்குரிய டிப்ளமோ ஒன்றைப் பெற்றார்.

டேவிட் லிவிங்ஸ்டன், பணம் சம்பாதிக்க விரும்பவில்லை! ஆட்களை சம்பாதிக்க விரும்பினார். ஆம்! ஆப்பிரிக்காவின் அடர்த்தியான காடுகளில் சென்று ஊழியம் செய்தார். சத்திய வசனத்தை நன்கு படித்தறிந்த ஒரு காரணத்தினால், அதனை நிதானமாய் போதிக்கும் பாங்கைப் பெற்றார். எத்தனையோ இன்னல்களையும், துன்பங்களையும் சகித்த அவர் இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே. சகல நாட்களிலும் இருக்கிறேன், என்ற வாக்குத்தத்தத்தை அடிக்கடி உரத்த சத்தத்தினால் சொல்லுவார்! தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நின்ற டேவிட் லிவிங்ஸ்டன் பைபிளை பல முறைகள் படித்தார்.

இந்த உலகத்தின் மாபெரும் மிஷனெரிகளில் ஒருவராக போற்றப்படுகிறவர் டேவிட் லிவிங்ஸ்டன். இருண்ட ஆப்பிரிக்கக் காடுகளுக்குள் மனிதரை மாமிசமாக உண்பவர்கள் மத்தியில் தைரியமாக சுவிசேஷ ஒளியோடு சென்று, முதன் முதலில் அங்கு தீபம் ஏற்றியவர்.

அவர் தன்னுடைய பெயரில் மகிழ்ச்சியடைவார். வேதத்தில் உள்ள டேவிட் (தாவீது) சிங்கத்திற்கு அஞ்சாமல் அதன் வாயைப்பிடித்துக் கிழித்தவரல்லவா? அந்தப் பெயரைத் தான் சூடியிருப்பது எவ்வளவு மகிழ்ச்சி. ஆப்பிரிக்கக் காடுகளில் உள்ள சிங்கத்திற்கும் மட்டும் அல்ல, அப்பாவி மக்களை விழுங்க வகை தேடும் சாத்தானாகிய சிங்கத்திற்க்கும் அவர் பயப்படவில்லை. சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று அப்.பவுல் சொல்லுவதைப்போல இவரும் பலமுறை சிங்கத்தின் பிடியில் இருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்.

சோர்வே அடையாத இவரது ஊழியம் எல்லா ஊழியருக்கும் ஒரு சவால். புதிய புதிய மலைகளின் மேல் இந்த பாரத்தோடு ஏறினார். விக்டோரியா நீர் வீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர் இவர்தான்.

மனிதனை அடிமையாய் விற்கும் வியாபாரத்திற்கு விரோதமாய் குரல் கொடுத்தவர், வழி தவறிய ஆடுகளை மிகவும் ஜாக்கிரதையோடு இவர் தேடினார். என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித் திரிகிறது விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை. எசே.34:6 வழி தவறும் ஆடுகளை, ஆத்தும பாரத்தோடு கரிசனையோடு தேடுபவர்.

நாம் ஜாக்கிரதையுள்ள ஊழியக்காரனாக விரும்பினால், இந்த டேவிட் லிவிங்ஸ்டனையும் மனதில் வைக்க வேண்டும். நாம் வெட்கப்படாத ஊழியக்காரர்களாயிருக்க தேவன் உதவுவாராக.

## குறிப்பு:

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.



*Your name / Quiz type / Month-Year*

***Sample: Derin/ Childrens Quiz / June-19***

***Derin / Kids Colouring / June-19***

***David / Bible Quiz / June-19***

***Church Email: csitcalain@gmail.com***



# கெர்ச்சிக்கும் சிங்கமா ?
## நம்மை தெரிந்து கொண்ட
# தேவனா..?



வேதத்திலே சத்துருவை சிங்கம் என்று வர்ணிக்கும் வசனங்கள் அனேகம் உண்டு. எதிராளியான பிசாசு கெர்ச்சிகிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றி திரிகிறான் என்று 1பேதுரு 5:8ல் வாசிக்கிறோம். சிங்கம் தன்னுடைய ஆதிக்கத்தை காண்பிக்க கர்ச்சிப்பு சத்தத்தை எழுப்புமாம். இந்த கர்ச்சனையை கேட்கும் மற்ற மிருகங்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் மிகுந்த பயத்துடனேயே இருக்குமாம். இப்படி பயமுறுத்தும் கொடூரமான சிங்கமாகிய சத்துரு நம்மையும் பயமுறுத்துவதுண்டு.

சிங்கங்கள் மற்ற மிருகங்களை வேட்டையாடி தின்னும் குணம் படைத்தவை. அவைகள் பசித்திருக்கும் போது மற்ற விலங்குகள் தன் எல்லைக்குள் வரும்படி அமைதியாய் இருந்து வேடிக்கை பார்க்குமாம். இரையாகும் மிருகங்கள் தன் எல்லைக்குள் இருக்கும் பட்சத்தில் மெதுவாக கர்ச்சித்து பயமுறுத்த ஆரம்பிக்குமாம். பயந்திருக்கும் விலங்குகளை வேட்டையாட மற்ற சிங்கங்களின் உதவியையம் நாடி தம் திட்டத்தை நிறைவேற்றுமாம்.

தானியேல் 6ம் அதிகாரத்தில், தானியேல் சிங்க கெபியிலே போடபப்டுவதை பார்க்கிறோம். கெபியில் இருக்கும் சிங்கங்கட்கு தினம் இருமுறை உணவு வழங்கப்படுவது வழக்கமாம். தானியேலை கெபிக்குள் போட்ட ராஜா, சிங்கங்களின் வேட்டையாடும் தீவிரத்தையும் உணவு பழக்கவழக்கங்களையும் அறிந்திருத்தவர். தானியேலை கெபிக்குள் போட்ட பின் இரவு முழுவதும் வேறு உணவு அவைகட்கு கொடுக்கப்படவில்லை. காலை வேளையில் கெபியை எட்டிப் பார்க்கிறான். அதிர்ச்சியடைகிறான். காரணம், சிங்கங்கள் தானியேலை ஒன்றும் செய்யவில்லை. தானியேலின் மேல் குற்றம் சாட்டின மனஷர் குடும்பத்தோடு போடப்படுகின்றனர். அவர்கள் கெபியின் அடியில் சென்று சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப் போட்டது என்று பார்க்கிறோம்.

ஒரே விதமான சிங்கங்கள், ஒரே கால சூழல், ஒரே விதமான உணவு ஆனால் சிங்கங்களின் செயல்பாடுகளோ வேறுபட்டவை. தானியேல் சிங்கத்தை ஜெயித்தான் தானியேல் மேல் குற்றம் சாட்டினவர்களை சிங்கம் மேற்கொண்டது. தானியேல் பாதுகாக்கப்பட்ட காரணங்களை அறிந்து, நாம் நம் வாழ்வில் செயல்படுவது நம் ஆவிக்குரிய வாழக்கையை பெலப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என எண்ணுகிறேன்.

தேவ சித்தத்தின்படியே, தான் அங்கு கொண்டு செல்லப்பட்டதை உணர்ந்த தானியேல், அந்த நெருக்கமான சூழ்நிலையிலும் நீதி செய்கிறவனாக காணப்பட்டான். தானியேல் 6:4 சொல்லுகிறது பிரதானிகளும், தேசாதிபதிகளும், ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலை குற்றப்படுத்தும் படி முகாந்தரம் தேடினார்கள். ஆனாலும் ஒரு முகாந்திரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது.. அவன் உண்மையுள்ளவனா யிருந்த படியால் அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.

தானியேல் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாய் காணப்பட்டான். தன்னை சுற்றியிருந்தவர்கட்கு முன்பாக தன்னை குற்றமற்வனாய் காட்டிக்கொள்ள எவ்வளவோ வாய்ப்பிருந்தும் அதையெல்லாம் நாடாமல் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாய் தன்னை காத்துக்கொண்டான் (தானி 6:10). ஆகவே தேவன் உலகத்தின எந்த காரியங்களும் அவனை மேற்கொள்ளாதவாறு காத்துக் கொண்டார் என்று வேதத்தில் நாம் காண்கிறோம்.

நம்முடைய வாழ்வு எப்படிப் பட்டதாய் காணப்படுகிறது? நம்முடைய குடும்பத்தினர் மத்தியில், நம் அயலகத்தார் மத்தியில், உடன் பணியாளர் மத்தியில், உடன் விசுவாசிகள் மத்தியில் என தேவன் நம்மை வைத்திருக்கும் இடங்களில் நற்சாட்சியாக காணப்படுகிறோமா? சிந்தித்து பார்ப்போம். தேவன் நம்மை குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கும் நோக்கத்தை உணர்ந்து அவருக்கு சாட்சியாக காணப்படுகிறோமா? அப்படியான வாழ்கைக்கு நம்மை நாம் அற்பணிக்கும் போது, நம் எதிரில் சிங்கங்களின் கெர்ச்சனைகள் கேட்கலாம், சிங்கங்கள் நம்மை நெருங்கி வரலாம் ஆனால் தானியேலை பாதுகாக்க தம் தூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்களை கட்டின தேவன் நமக்கு எதிராக வரும் சிங்கங்களின் வாய்களையும் கட்ட வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்பது அதிக நிச்சயமல்லவா? நம்மை காக்கும் தேவனிடத்தில் நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம் அவர் நம்மை பாதுகாத்து வழிநடத்துவார்.

**Article by: M.Nesamony.**




கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள்
சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி
அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் மன்னாவின் சாட்சி பகுதியில்
கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

# காகம்...



ஒரு ஏழைக்குடும்பம் மிகவும் கொடிய வறுமையில் போராடிக் கொண்டிருந்தது. அங்கு சிறு பிள்ளைகள் சாப்பாட்டிற்க்கு ஒன்றுமில்லாமல் பட்டினியாய் தவித்த போது, **தாய், பிள்ளைகளுக்கு எலியாவை கர்த்தர் எவ்வாறு போஷித்தார் என்பதைச் சொல்லி, விசுவாசத்தை ஊட்டினாள்.** இரவில் மழையும், பனியும், குளிரும் பெய்தபடியால் தாய் ஜன்னல், கதவுகளை சாத்திவிட்டு பிள்ளைகளை பசியோடு படுக்க வைத்தாள். ஒரு குழந்தை எழுந்து, "அம்மா, எனக்கு ஒரு சந்தேகம்! ஜன்னல் மூடியிருந்தால், கர்த்தர் அனுப்பின காகம் எப்படி வீட்டுக்குள் வரும்? கர்த்தர் அப்பமும், இறச்சியும் கொடுத்தனுப்பினால் நமக்கு கிடைக்காதே! காகம் வரும்படி கதவை திறவுங்கள்" என்றாள். அந்த தாய், தன் விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு ஜன்னலை திறந்தாள்.

அங்கே வீட்டுக்கு வெளியே மழைக்காக ஒதுங்கியிருந்த அந்த நகர மேயர் இந்த சம்பாஷனையைக் கேட்டுக் கொண்டே இருந்தார். அவரை அவர் நன்பர்கள் அன்போடு "காக்கா" என்று அழைப்பதுண்டு, எனவே அவர் ஓடிப்போய் உணவுப் பதார்த்தங்களை நிறைய வாங்கிக் கொண்டு வந்து ஜன்னல் வழியாக எட்டிப் போட்டு விட்டு சென்றார்.

"தொப்" என்ற சத்தங்கேட்டு, பிள்ளைகள் ஓடிப்போய் உணவு பார்சலை எடுத்தர்கள். மிகுந்த ஆனந்தத்துடன் கர்த்தருக்கு நன்றி செலுத்தினார்கள்.

அன்பானவர்களே! நாமும் காகங்களை எதிர்பார்கிறோமா? எதிர்பார்பது மாத்திரமல்ல, அந்த பிள்ளைகளைப் போல விசுவாசம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்படி என்றால் நாமும் விசுவாசம் என்னும் ஜன்னல்களை திறந்து வைப்போம். காகத்தைக் கொண்டு போஷிக்கிற தேவன் நம்மையும் போஷிக்க வல்லவர்.

-- **நெல்சன் சோபித ராஜ்.**

# Your Special




**Manny Pacquiao** is internationally known for being one of the world's fiercest boxers, but he says that it's his Christian faith that matters most to his identity, as it serves as the basis for each facet of his wide-ranging career.

In addition to his boxing success, Pacquiao is also a congressman representing the Philippine province of Sarangani and a professional basketball player. But above it all, the evangelical Christian said that he seeks to live his life by following "God's way."

The boxer grew up in a Catholic home, though he had a dramatic conversation experience a few years ago that led him to become a born-again Christian — a transformation that he said radically changed his life. It was a "conviction from the holy spirit" that inevitably led him to discover Jesus after he claims to have heard the "Voice of God."

"I heard the voice of God and I saw two angels," he said of the conversion experience that he claims unfolded deep inside of a beautiful forest amid flowers. "When I heard the voice of God, I felt like I died. I was in the middle of the forest and I was kneeling and praying with my face on the ground and then I saw a light, a very white light and I heard the voice."

He reflected on this experience in an interview with the Telegraph last year as well, describing the angels he saw as having "white, long, big wings" and claiming that God showed him "about the end of time" and that these experiences inevitably changed him. Regardless of whether people choose to take him at his word, it's certainly true that a profound change took root in his life.



After that experience, Pacquiao began to read his Bible every day and rather than womanizing and gambling as he did in the past, he continues to live a devout Christian life.
"I'm really thankful that God has given me this kind of a heart," Pacquiao says of his religious devotion.

**The boxer**, known for his brutal takedowns in the ring, also had a heartfelt message for those who might not share his devotion to Christ. “I just want to let them know that — all over the world — that there is only one way of salvation, only through Jesus Christ,” he said.
“They have to know about Jesus and believe. If they don’t believe, they don’t have salvation, because the Lord Jesus is the only way of salvation.”

Pacquiao is living his faith out as well, with a project currently unfolding in the Philippines to build a church and community center — something that he said will help make positive change in the community.

“We are starting building the church and also helping the people, giving them shelter,” he said, noting that the church will help the community discover and follow God. Pacquiao defeated Timothy Bradley Jr in his last professional fight in Las Vegas, NV on April 9th, 2016. The t-shirt he wore to the ring read “Jesus is the name of the Lord” on the back.

On the political front, Pacquiao said that he sees the platform as yet another blessing God has placed in his life to allow him to spread the gospel and to help others in need. “The Lord has blessed me [with] everything I have … [my] political career and serving the Lord and being a boxer — and I believe God has a purpose,” he said. “It is behind my expectation and imagination. I think it’s time to proclaim his name, not mine.” He’s hoping his government post will help him assist those in need by cutting through corruption and focusing on what truly matters. “I want to serve people honestly and help them. The government has money, has power to help people but the problem is a lot of public officials’ figure that they have their own agenda,” Pacquiao said. “My goal is to serve with the fear of the Lord and [follow him].”

He added, “Whatever God plans will be done. I don’t want to follow my ways. I want to follow God’s ways.” Whether it’s in the ring or from the political pulpit, it is this ideology that guides all that the famed boxer does in life.

## Put God First and the rest is Blessed

சபை மக்கள் தங்கள் வீட்டில் உள்ள முதற்பலன்கள் மற்றும் தேவைக்கு கொடுக்க விரும்புகின்ற பொருள்களை சபையுடன் காணிக்கையாய் செலுத்தி தேவனை மகிமைப்படுத்தலாம். அந்த பொருள்; சபை ஆராதனை முடிந்த பிற்பாடு ஏலம் விடப்படும். சபை மக்கள் உற்சாகத்துடன் அந்த ஏலத்தில் பங்கு பெறுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.



# HAPPINESS/SADNESS

The university professor challenged his students with this question- Did God create everything that exists? A student bravely replied, "Yes, he did!"

"God created everything? The professor asked.

"Yes sir", the student replied.

The professor answered, "If God created everything, then God created evil since evil exists, and according to the principal that our works define who we are then God is evil". The student became quiet before such an answer. The professor was quite pleased with himself and boasted to the students that he had proven once more that the Christian faith was a myth.

Another student raised her hand and said, "Can I ask you a question professor?"

"Of course,", replied the professor.

The student stood up and asked, "Professor, does cold exist?"

"What kind of question is this? Of course, it exists. Have you never been cold?" The students snickered at the young woman's question.

The young woman replied, "In fact sir, cold does not exist. According to the **laws of physics**, what we consider cold is in reality the absence of heat. Everybody or object is susceptible to study when it has or transmits energy, and heat is what makes a body or matter have or transmit energy. Absolute zero is the total absence of heat; all matter becomes inert and incapable of reaction at that temperature. Cold does **not** exist. We have created this word to describe how we feel *if we have no heat*."

The student continued, "Professor, does darkness exist?"

The professor responded, "Of course it does."

The student replied, "Once again you are wrong sir, darkness does not exist either. Darkness is in reality the absence of light. Light we can study, but not darkness. In fact we can use Newton's prism to break white light into many colours and study the various wavelengths of each colour. You cannot measure darkness. A simple ray of light can break into a world of darkness and illuminate it. How can you know how dark a certain space is? You measure the amount of light present. Isn't this correct? Darkness is a term used by man to describe what happens when *there is no light present*." Finally, the young woman asked the professor, "Sir, does evil exist?"

Now uncertain, the professor responded, "Of course, as I have already said. We see it every day. It is in the daily example of man's inhumanity to man. It is in the multitude of crime and violence everywhere in the world. These manifestations are nothing else but evil."

To this the student replied, "Evil does not exist sir, or at least it does not exist unto itself. Evil is simply the absence of God. It is just like darkness and cold, a word that man has created to describe the absence of God. God did not create evil. Evil is not like faith or love, that exist just as light and heat do. Evil is the result of what happens when man does *not* have God's love present in his heart. It's like the cold that comes when there is no heat or the darkness that comes when there is no light."

The professor was speechless, and slightly outrageous at how the student successfully contradicted him. Telling her to sit down, he rushed on to the lessons and didn't really go back to that topic ever again.

To be able to really feel and appreciate warmth, you must first experience cold. Likewise, to be able to really feel and appreciate joy and happiness, you must first experience sadness. Ironic, isn't it?

In life, most of us tend to take certain things for granted; not really appreciating good things while we have them. We don't realize the true value of something until we're close to losing it, or sometimes, even lose it.

So, every time you feel down, remember, what you are actually feeling can possibly be the absence of happiness, rather than sadness itself.

Use that to keep you going. If there's a time where you realize that you're experiencing the *absence* of happiness, understand that there will also be a time where you experience the **presence** of it.

**Psalm 46:1-3 "God is our refuge and strength, an ever-present help in trouble. Therefore, we will not fear, though the earth gives way and the mountains fall into the heart of the sea, though its waters roar and foam and the mountains quake with their surging."**

**Psalm 37:4 "Take delight in the Lord, and he will give you the desires of your heart."**

*-Diniya Sunshine*

# சிறுவர் பகுதி / Children's Corner

## Cartoon of the Month

**LIFEBOAT** A Joyful 'toon by Mike Waters




For God did not send his Son into the world to condemn the world, but to save the world through him. - JOHN 3:17 NIV

## "Have you asked Jesus to come into your heart...?

**Children who successfully did the Bible Word Search**

Roshan, Ridhun , Shelbino, Jayne John, Johan Sanjo, Genelia, Earline, Jason Eric, Jonathan, Eric Jaden

**Children who successfully did the Bible Cross Word**

Roshan, Shelbino, Eastrine, Joshua, Jonathan

Congratulations!

# June'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF PROVERBS CHAPTER 11-15**

**(Referred from NIV BIBLE)**

1. When ________ comes then comes disgrace
   a) Anger b) pride c) sin

2. What is worthless in the day of wrath?
   a) Wealth b) Good deeds c) witness

3. An evil man is trapped by his _______________
   a) Jealousy b) sinful talk c) sinful acts

4. Who gives thought to his steps?
   a) Simple man b) affected man c) prudent man

**COMPLETE THE VERSE:**

5. "He who guards his _________ guards his_______ but he who speaks rashly will come to________"

6. "Stay away from a ______________ for you will not find ____________ on his lips"

7. "A _______________ man does foolish things and a ___________ man is hated"

8. "All ___________ brings profit but _____________ leads only to poverty"

9. What comes when you ignore discipline?

10. What stirs up anger and what turns away wrath?

**Children who wrote the Children's Quiz Correct Answers:**

Roshan, Shelbino, Diniya, Dennis, Eastrine, Jayne John, Analin, Angelin, Joshua, Genelia Allen,

CONGRATULATIONS

## Last Month Children's Quiz Correct Answers: May- 2019

**From the Book of Prov 6to 10**

1. (a) Ants (6:6)

2. (b) Gods instruction, knowledge (8:10)

3. (a) Death (8:36b)

4. (a) Wickedness, righteousness (10:2)

5. Wisdom, understanding (7:4)

6. Hate evil (8:13)

7. Stolen waters, secret eaten bread (9:17)

8. Hatred, Strifes, love, sins (10:12)

9. (1:7) and (9:10) "The fear of the Lord is the beginning of wisdom"

10. 6:16-19
A proud look

lying tongue

Hands that shed innocent blood

A heart that devises

Wicked imaginations

Feet that is swift in running to mischief

A false witness that speaketh lies

He that soweth discord among brothers.

# Kids Coloring (Kinder & Beginner)



JESUS LOVES ME

Dear Kids... Write your name... here...

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

## PRAY EVERY DAY

Parents... Its your **DUTY** to **TEACH** & **WATCH** your kids Pray Every Day...

Hartlyn Herchil / Crasslin Denova
Ridhun Yojit / Rishon Yojit
Johan Sanjo / Jehoash John
Jonathan Asher / Eion Jayden
Jeremiah Alan / Jemima Ashni
Jason Eric

# Bible Word Search (Beginner / Primary)

THE GREATEST NEW TESTAMENT COMMANDMENT

**Write the NEXT LETTER of the alphabet on the Space**

**(Note: Use "A" after "Z")**

**Find the verse and quote the reference.**

**(REFERRED FROM NIV BIBLE)**



**K N U D    S G D    K N Q C    X N T Q**

**F N C    V H S G    Z K K    X N T Q**

**G D Z Q S    Z M C    V H S G    Z K K**

**X N T Q    R N T K    Z M C    V H S G**

**Z K K    X N T Q    L H M C**

**K N U D    X N T Q**

**M D H F G A N Q**

**Z R    X N T Q R D K E**

| Write Your Name Here... | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)

**Note: ACROSS ➔ and DOWN ↓**

Abraham

Never Panic
Just Pray




1. Original name of Abraham ➔
2. Name of Abraham's first son ➔
3. Name of His promised son ➔
4. "I will make of you a great ______" ↓
5. Wife of Abraham ↓
6. Nephew of Abraham ➔
7. Abraham pleaded GOD not to destroy this city ↓
8. Name of His maidservant ➔
9. Age at which He had his promised son ➔
10. Place where Abraham took his promised son to give as an offering to God ↓
11. God spared His son and provided a _____ as an offering ➔

Your Name ↓

# வேத வினா-விடை போட்டி
## (புலம்பல், எசேக்கியேல் 1–5)

1. எசேக்கியேல் தீர்க்கதரிசி எப்படிப்பட்ட உணவுகளை வாய்க்குட்படுத்தவில்லை என்று கூறுகிறார் ?

2. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் தந்தை யார் ?

3. என் கண் உன்னை தப்பவிடாது என்று எதனால் கர்த்தர் கூறுகிறார் ?

4. யார் தங்களுடைய தலையின் மேல் புழுதியைப் போட்டுக்கொள்கிறார்கள் ?

5. கொடுமையான அடிமை வேலை செய்ய சிறைப்பட்டுப் போனவர்கள் யார் ?

6. கர்த்தர் யாருக்கு நல்லவராயிருக்கிறார் ?

7. எசேக்கியேல் தீர்க்கதரிசியை முகங்குப்புற விழ வைத்த இரண்டு சம்பவங்கள் எவை ?

8. கர்த்தர் யாருடைய அக்கிரமத்தை விசாரித்து, பாவங்களை வெளிப்படுத்துவார் ?

9. புஸ்தகச்சுருளில் உள்ளும் புறம்பும் என்ன எழுதப்பட்டிருந்தது ?

10. எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட தரிசனத்தில் வரும் நான்கு ஜீவன்களுடைய சாயல் எப்படி இருந்தது ?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1. எரே 51:15,16 | 2. எரே 50:6 | 3. எரே 49:16 | 4. எரே 48:13 | 5. எரே 46:20,23 | 6. எரே 52:13 | 7. எரே 51:63 | 8. எரே 51:11 | 9. எரே 51:39 | 10. எரே 49:4

*June*
**மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. எபென் A.பிரசாத்

**வாழ்த்துக்கள்...!**



## வேதாகம விடுகதை...

- தன்னுடைய குடும்பத்திற்காக (உயிர் தப்பிக்க) தன் தாய் நாட்டை காட்டிக் கொடுத்த பெண் யார்...?

- தேசத்தின் யுத்தத்திற்காக உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று தன் தொண்டர்களுக்கு கட்டளை கொடுத்த தலைவரும் மகனும் மீறி சாப்பிட்டார்கள் அவர்கள் யார்..?

- தன் தேசத்தில் வேலை செய்த வேலைக்காரனிடம் தன்னை ஆசீர்வதிக்கும்படி கேட்ட ராஜா யார்..?

- ராஜாவுடைய விரோதியை கொலை செய்தால் தனக்கு பெரிய பரிசு கிடைக்கும் என்று எண்ணி அவனை கொலை செய்து ராஜாவுக்கு அறிவித்தவனுக்கு ராஜா கொடுத்த பரிசு என்ன..?

- தன் மரண ஓலையை தன் கையிலே எடுத்துக்கொண்டு போய் மரணம் அடைந்த மனிதன் யார்..?

- தேவதிபதிக்கு (ஆரோன்) விரோதமாயிருந்த தீர்க்கதரிசியானவள் யார்..?

- ஜெபிக்கிறவனை கண்டால் சாத்தான் மட்டுமல்ல, அரசாங்கமே நடுங்கித் திகைக்கும் அப்படி யாருடைய ஜெபம் இருந்தது..?

- எத்தனை தலைவர்கள் பிறந்தவர்கள் தேசத்தில் ஆட்சி செய்து மாற்றத்தை உண்டாக்க இறுதியில் தோல்வி அடைந்தார்கள் ஆனால் ஒருவர் பிறந்தவர் தேசத்தில் ஆட்சி செய்யாமலே மாபெரும் மாற்றத்தை கொடுத்தவர் அவர் யார் என்ன மாற்றம்..?

- பாவத்தின் பட்டணத்தில் வாழும் போது பாவம் செய்யாமல், பாவமே இல்லாத இடத்தில் பாவம் செய்தவர்கள் யார்..?

## வேதாகம கணக்கு:

கொள்ளையில் கர்த்தருக்குப் பகுதியாக வந்த ஆடுகளின் எண்ணிக்கையை, எத்தன் மாமனார் வீட்டில் வேலைக்காரனாய் வேதனைப்பட்ட காலத்தால் பெருக்கி, பூமியின் மேல் தண்ணீர் சூழ நின்ற நாட்களால் வகுத்து அத்துடன் தேவனுடைய மனுஷனுக்கு முதற்பலனாக வந்த வாற்கோதுமை அப்பங்களின் எண்ணிக்கையைக் கூட்டினால் கிடைக்கும் எண் கர்த்தரின் ஊழியக்காரரின் ______________ குறிப்பிடுகிறது..?

**சென்ற மாத வேதாகம விடுகதைக்கான விடைகள்**

சிம்சோன் / தாவீது / ரிபெக்கா / சாலொமோன் / தானியேல் / சிம்சோன் / யோனா / தீர்க்கதரிசிகள் / சவுல் யோனத்தான் / சாலொமோன் / எலிசா / [illegible] / இஸ்ரவேலர்

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

## பிறந்தநாள் ஆசரிப்போர் *Birthday Celebrants*

| | |
|---|---|
| 1st June | Mr. Robinson |
| 4th June | Mrs. Esther Gerald Antony |
| 5th June | Mrs. Anna Jothi |
| 5th June | Mrs. Shalini |
| 6th June | Mr. Kirubaharan D |
| 6th June | Mr. Joel Ranjith Kumar |
| 8th June | Mr. Ujin Raj |
| 9th June | Ms. Ansilin Suga |
| 10th June | Mr. Saman Raj Kumar |
| 16th June | Mr. Ashok Daniel Prabakaran |
| 17th June | Mrs. Anitha Jose |
| 19th June | Mr. Abhisek Rathinam |
| 22nd June | Mr. Melbin Paul |
| 23rd June | Mr. Belfer John Sigamony |
| 23rd June | Mr. David Johnson Premkumar |
| 24th June | Mr. Ashok Prasad |
| 27th June | Ms. Shiny Rebeca |
| 29th June | Mr. John Murugan Nadakan |
| 30th June | Mr. Nesamony.M |
| 30th June | Mrs. Sinduja Sathish Kumar |

*Celebrate the Gift of the Life Given by God & Enjoy this Special day...!!!*



## திருமணநாள் ஆசரிப்போர் / *Wedding Anniversary*

| | |
|---|---|
| 1st June | Mr. Jeremiah Kingston & Mrs. Olivia Sherin |
| 2nd June | Mr. Ashok Daniel Prabhakaran & Mrs. Princy |
| 6th June | Mr. Ashok Prasad & Mrs. Eben A. Prasad |
| 15th June | Mr. Deva Prakash & Mrs. Sheeba Deva Prakash |
| 21st June | Mr. Balaji Ramaiyan & Mrs. Roselin Balaji |
| 29th June | Mrs. Celin Jose & Mrs. Anitha Jose |

# நமது சபை உறுப்பினர்களை - தெரிந்து கொள்வோம்.

| CSI Tamil Parish Family No: 010 | Mobile no: 050 449 1769 |
|---|---|
| Mr. D. Rajavel (Head) |  |
| Mrs. Jein Arputhakani (Wife) | |
| Ms. Divya Darshini (Daughter)<br>Ms. Diniya Sunshine (Daughter)<br>Mstr. Dennis Roger (Son) | |
| Location in India: Melapalayam<br>Tirunelveli Dist, Tamilnadu. | |

| CSI Tamil Parish Family No: 013 | Mobile no: 050 832 8013 |
|---|---|
| Mr. P. David Raj (Head) | |
| Mrs. Vasantha SelvaKumari (Wife) | |
| Mr. Abishek (Son)<br>Ms. Abighail (Daughter) | |
| Location in India:<br>Kaliyakavillai,<br>K K Dist, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 017 | Mobile no: 050 543 2630 |
|---|---|
| Mr. David Livingston (Head) |  |
| Mrs. Beula Rani (Wife) | |
| Mr. Derin David Livingston (Son)<br>Mr. Derik David Livingston (Son) | |
| Location in India:<br>Kadamalaikuntru<br>K K Dist, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 018 | Mobile no: 050 233 4421 |
|---|---|
| Mr. Selva Kumar (Head) |  |
| Mrs. Radhika Grace (Wife) | |
| Mr. S. Jensin Bose (Son)<br>Mr. S. Jesvin Bose (Son) | |
| Location in India:<br>Charode, Thuckalay,<br>K K Dist, Tamilnadu. | |

# DAILY BIBLE READING JUNE – 2019

## “Your word is a lamp to my feet and light for my path”

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| *1* | *சங்கீதம் 88* | *Psalms 88* | | *உபாகமம் 5* | *Deuteronomy 5* | |
| *2* | *சங்கீதம் 89* | *Psalms 89* | | *உபாகமம் 6* | *Deuteronomy 6* | |
| *3* | *சங்கீதம் 90* | *Psalms 90* | | *உபாகமம் 7* | *Deuteronomy 7* | |
| *4* | *சங்கீதம் 91* | *Psalms 91* | | *உபாகமம் 8* | *Deuteronomy 8* | |
| *5* | *சங்கீதம் 92-93* | *Psalms 92-93* | | *உபாகமம் 9* | *Deuteronomy 9* | |
| *6* | *சங்கீதம் 94* | *Psalms 94* | | *உபாகமம் 10* | *Deuteronomy 10* | |
| *7* | *சங்கீதம் 95-96* | *Psalms 95-96* | | *உபாகமம் 11* | *Deuteronomy 11* | |
| *8* | *சங்கீதம் 97-98* | *Psalms 97-98* | | *உபாகமம் 12* | *Deuteronomy 12* | |
| *9* | *சங் 99-101* | *Psalms 99-101* | | *உபாகமம் 13, 14* | *Deuterono 13,14* | |
| *10* | *சங்கீதம் 102* | *Psalms 102* | | *உபாகமம் 15* | *Deuteronomy 15* | |
| *11* | *சங்கீதம் 103* | *Psalms 103* | | *உபாகமம் 16* | *Deuteronomy 16* | |
| *12* | *சங்கீதம் 104* | *Psalms 104* | | *உபாகமம் 17* | *Deuteronomy 17* | |
| *13* | *சங்கீதம் 105* | *Psalms 105* | | *உபாகமம் 18* | *Deuteronomy 18* | |
| *14* | *சங்கீதம் 106* | *Psalms 106* | | *உபாகமம் 19* | *Deuteronomy 19* | |
| *15* | *சங்கீதம் 107* | *Psalms 107* | | *உபாகமம் 20* | *Deuteronomy 20* | |
| *16* | *சங் 108-109* | *Pslm 108-109* | | *உபாகமம் 21* | *Deuteronomy 21* | |
| *17* | *சங் 110-111* | *Pslm 110-111* | | *உபாகமம் 22* | *Deuteronomy 22* | |
| *18* | *சங் 112-113* | *Pslm 112-113* | | *உபாகமம் 23* | *Deuteronomy 23* | |
| *19* | *சங் 114-115* | *Pslm 114-115* | | *உபாகமம் 24* | *Deuteronomy 24* | |
| *20* | *சங் 116* | *Pslm 116* | | *உபாகமம் 25* | *Deuteronomy 25* | |
| *21* | *சங் 117-118* | *Pslm 117-118* | | *உபாகமம் 26* | *Deuteronomy 26* | |
| *22* | *சங் 119 1-24* | *Pslm 119:1-24* | | *உபா 21:1 -28:19* | *Deut 21:1 -28:19* | |
| *23* | *சங் 119: 25-48* | *Ps 119:25-48* | | *உபா 28: 20 -68* | *Deut 28: 20 -68* | |
| *24* | *சங் 119: 49 -72* | *Ps 119:49-72* | | *உபாகமம் 29* | *Deuteronomy 29* | |
| *25* | *சங் 119: 73-96* | *Ps 119:73-96* | | *உபாகமம் 30* | *Deuteronomy 30* | |
| *26* | *சங் 119: 97-120* | *Ps 119:97-120* | | *உபாகமம் 31* | *Deuteronomy 31* | |
| *27* | *சங் 119:121-144* | *P 119:121-144* | | *உபாகமம் 32* | *Deuteronomy 32* | |
| *28* | *சங் 119:145-176* | *P 119:145-176* | | *உபா 33- 34* | *Deuteron 33-34* | |
| *29* | *சங்: 120-122* | *Pslm 120-122* | | *யோசுவா 1* | *Joshua 1* | |
| *30* | *சங்: 123- 125* | *Pslm 123-125* | | *யோசுவா 2* | *Joshua 2* | |

**Dusty Bibles lead to Dirty Lives…**
**Never do that…**